# கம்பத்து சிறுமி முதல் கோலாலம்பூர் மேயர் வரை என் வளர்ச்சிக்கு வறுமையே அடித்தளமானது



**கோலாலம்பூர், ஆக. 16- நெகிரியில் ஒரு பால்வெட்டு தொழிலாளர் தம்பதியருக்கு மகளாகப் பிறந்து நகர வடிவமைப்பு துறையில் பட்டம் பெற்று இன்று கோலாலம்பூர் மாநகர மேயர் வரை உயர்ந்திருக்கிறார் மைமுனா ஷரிப்.**

**அதிலும் 6 ஆண்டுகள் ஐநாவில் பணி செய்த அவரது மகத்தான அனுபவம் கோலாலம்பூர் வளர்ச்சிக்கு மேலும் வலு சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

கம்பத்தில் பிறந்தேன்

நெகிரி கோலப்பிலாவில் ஒரு மலாய் கம்பத்தில் பிறந்து வளர்ந்தேன். காலையிலேயே பெற்றோருக்கு உதவி செய்ய பால்மரத் தோட்டத்திற்கு செல்வேன். பின்னர் பள்ளிக்குச் சென்று திரும்பியவுடன் மண்ணெண்ணெய் விளக்கை வைத்துக் கொண்டு வீட்டுப் பாடங்களைச் செய்வேன்.

நகர வடிவமைப்பு என்பது என் உள்ளத்தில் ஊறிப்போனது. அந்த துறையையே எடுத்துப் படித்தேன். நெகிரியில் பிறந்து வளர்ந்தாலும் பினாங்கில் என் முக்கால் வாசி வாழ்க்கை கழிந்தது. 30 ஆண்டுகள் அங்கேயே இருந்து நான் வேலை செய்தேன் என்று 63 வயது மைமுனா குறிப்பிட்டார்.

கோலாலம்பூரின் முதல் பெண் மேயராக அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நேற்று முதல் அவர் தமது பணியை தொடங்கினார்.

பினாங்கில் பல்வேறு பணிகள்

நெகிரி கோலப்பிலாவிலிருந்து அமெரிக்கா வரை சென்று பின்னர் பினாங்கில் நான் மேயராக இருந்தேன் என்றார் அவர்.

அமெரிக்காவில் மேல் படிப்புக்கு செல்ல எனக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. அங்கு கார்டிப் பல்கலைக்கழகத்தில் நகர திட்ட வடிவமைப்புத் துறையில் பட்டம் பெற்றேன்.

பின்னர் 1985 ஆம் ஆண்டு நாடு திரும்பி பினாங்கு நகராண்மைக்கழகத்தில் நகர்ந்த திட்ட வடிவமைப்பாளராக பணியை தொடங்கி 2003 ஆம் ஆண்டு அந்த துறையின் இயக்குநராக உயர்ந்தேன் என்றார் அவர்.

இதன் பின்னர் ஜார்ஜ்டவுன் உலக பாரம்பரிய சின்ன நிறுவனத்தின் முதல் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்றேன். 2009 இல் செபராங் பிறை நகராண்மைக்கழக தலைவராகவும் 2011 ஆம் ஆண்டு சிறிது காலம் பினாங்கு நகர மன்ற மேயராகவும் பின்னர் 2017 ஆம் ஆண்டு பினாங்கு மேயராகவும் பணியாற்றினேன்.

நைரோபியில் உள்ள ஐநா அலுவலகத்தில் இடைக்கால தலைமை இயக்குநராகவும் பணியாற்றியிருக்கிறேன். எங்கு சென்றாலும் என்னுடைய வேர்களை நான் மறக்க வில்லை. கிராமப்புறங்களில் நிலவுகின்ற வறுமையை மாற்ற என்ன செய்யலாம்.

வறுமையே அடித்தளம்

நகர வடிவமைப்பில் எதையெதை மாற்றி அமைக்கலாம். மக்களை அதில் எப்படி ஒன்றிணைக்கலாம் என்று நான் சிந்திப்பேன்.

நிபுணத்துவ அமைப்புக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பொது மக்களை எல்லாம் ஒருமுகப்படுத்தி இந்த திட்டத்தில் அவர்களை மையப்படுத்தும் நடவடிக்கைகளை பற்றி நான் சிந்திப்பேன் என்றார் அவர்.

ஒரு தலைவர் என்பவர் அடிமுதல் நுனி வரை எல்லோருடனும் பழகும் அணுகு முறையை கொண்டிருக்க வேண்டும். வறுமை நம்மை முன்னுக்கு கொண்டு வராது என்பதல்ல. முயன்றால் நம்மாலும் முடியும் என்பதற்கு என் வாழ்க்கையே ஓர் உதாரணம் என்றார் மைமுனா.